631

631

# பண்டைத் தமிழ் மக்கள் வரலாறு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
-3 MAY 1934
MADRAS

1949

சுவாமி பரிபூரணாநந்தர்,
ஸ்ரீராமகிருஷ்ண மடம்.

V211 'A
N34
17234

631

# தோற்றுவாய்

OFFICE OF THE REGISTRAR OF ... -3 MAY 1934 MADRAS

ஆரியரிடமிருந்தே தமிழர் நாகரிகம் கற்றனர் என்ற பிழைபட்ட பொருள்பட நான்காண்டுகட்கு முன்னம் யாழ்ப்பாணம் "இந்துசாதன"த்தில் ஒரு கட்டுரை வெளியாயிற்று. அதைமறுத்தெழுத ஒருப்படாவிடினும், நம்மவருக்கு உண்மையை ஓரோவழி விளக்கும் கருத்துடன் திருபரிபூரணாநந்த அடிகள் "பண்டைத் தமிழ் மக்கள் வரலாறு" என்றொரு கட்டுரையை யெழுதி "இந்துசாதனம்" முதலிய வெளியீடுகளில் வெளியிட்டருளினர்.

பல ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்களை திரட்டித் தன்னகத்துக் கொண்டிருப்பதால், அக்கட்டுரையினை ஒருநூலுருவில் வெளியிட்டால் யாவருக்கும் பயன்படும் என்று என்போன்ற சிலநண்பர் அடிகளிடத்துக் கூறினோம். அவ்விண்ணப்பம் இப்பொழுது நிறைவேறுகிறதுபற்றி மகிழ்கூர்கின்றேன்.

631

திருச்செந்தூர்
15—3—34

சண்முகசுந்தரம்,
சூப்பிரண்டேன்று
ஸ்ரீசுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்.

-600 008.
172811
860
301.4
V211 A N3

The Saivaprakasam Press, Tuticorin.

# பண்டைத்தமிழ் மக்கள் வரலாறு.

## தோற்றம்.

சென்ற சில ஆண்டுகளாய் நம் பண்டைத் தமிழ் மக்களைப்பற்றிய ஆராய்ச்சியானது பல தமிழறிஞர்களால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. ஒரு சிலர், தமிழர் என்பார் இந்தியாவில் வந்து குடியேறியவர் என்றும், மற்றொரு சிலர் ஆரியருள் ஒருவகையாரென்றும், வேறுசிலர் அயல் நாடாகிய மேலை ஆசியாவிலிருந்து இந் நாட்டிற்குக் கடல்வழியாயும் நிலவழியாயும் பழையகாலத்தில் வந்த ஒருவகை ஆரியரென்றும் பல திறப்பட்ட கொள்கைகளையுடையராய்க் காணப்படுகின்றனர். இன்னும், தமிழரைத் திராவிடரென்று ஒரு சாராரும், மற்றொரு சாரார் திராவிடம் என்றால் திராவிடம் என்ற நாட்டைக் குறித்து, அந்நாட்டில் வந்தாரைத் திராவிடர் என்பர் என்றும், எல்லாரும் ஆரியரேயென்றும், ஆரிய நாகரீகத்தையே தமிழர் பின் பற்றினர் என்றும் ஒன்றற் கொன்று மாறுபடக் கூறுகின்றனர். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராய் இருந்த ஸ்ரீமான். ஆ. சிங்காரவேலு முதலியாரவர்களால் இயற்றப்பெற்று, மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடப்பெற்ற அபிதான சிந்தாமணியில் "திராவிடம்" என்றால் "தமிழர்க்கு ஆரியரிட்ட ஒரு பெயர்" என்று குறித்துள்ளார். இவற்றையெல்லாம் உள்ளவாறு ஆராயப் புகுந்த நாம் ஞாலந்தோன்றிய காலந்தொட்டு மக்களின் உற்பத்தி, நாகரீகவளர்ச்சி, கலைவளர்ச்சி முதலியவற்றை மேலைநாட்டவரும் தமிழறிஞரும் மற்றோரும் எவ்வாறு கூறுகின்றனர் என்று ஒரு சிறிது கவனிப்பாம்.

இப்பூமியானது கதிரவனிலிருந்து கதித்துப் பறந்து விழுந்த ஒரு பெரும் அனற் பிழம்பென்றே கருதப்படுகின்றது. அங்ஙனந் தெறித்து விழுந்த நெருப்பான பிழம்பின் வெப்பந் தணிவதற்கு எத்தனைகோடி ஆண்டுகளாயினவோ அறியோம். இப்பொழுதும் மிக ஆழத்தே அனலாயக் கிடப்பதை அறியக்கிடக்கின்றது. பூகம்ப முண்டான காலங்களிலும் இதை நன்கறிந்திருக்கலாம். சமீபத்தில் பாடலிபுரத்தில் உண்டான பூகம்ப காரணமாய் நிலம்வெடித்து வெப்பமான சேறும் நீரும் பெருகியதை கேட்டிருக்கிறோமன்றோ. ஆகவே நிலப்பரப்பு வெப்பந்தணிந்த ஞான்று முதன் முதல் கடற்பூண்டுகளும், மலைப்பூண்டுகளும், மீன்களும், பின்னர் சிறுகொடிகளடர்ந்த காடுகளும், ஊர்ந்து செல்வனவாய பூச்சி புழுக்களும், பின்னர் பெருமரங்களும் தோன்றினவென்று நிலநூல் வல்லார் கூறுகின்றனர்.

## முதலில் மக்கள் தோன்றிய நிலப்பரப்பு

மக்கள் நிலப்பரப்பின் எந்தப் பகுதியில் முதன்முதலாகத் தோன்றி வாழ்ந்தனர் என்பதே முக்கியமாய் அறிய வேண்டியது. ஞாயிற்றைச் சுற்றி வரும் நிலவுருண்டையின் நடுப்பகுதியே முதலிற் குளிரப்பெற்றுப் பின் ஏனைப்பகுதி குளிர்ந்த தென்பதை அந்நிலவுருண்டையின் வடதுருவ, தென் துருவப் பகுதிகளின் சுழற்சி விரைவின்மையையும், நிலத்து நடுக்கோட்டின் பகுதி சுழலும் விரைவையும் நுணுகி அறியின் இனிது புலனாகும். ஆனாலும் வடதுருவத் தென் துருவப் பகுதிகள் நடுக்கோட்டு (Equator) பகுதியிலும் குளிராயிருப்ப தெங்ஙனமெனச் சிலர் கேட்கலாம். கதிரவனது ஒளியோடு கூடிய வெப்பமான கதிர்கள் ஞாலத்து நடுப் பகுதியில் எதிர்முகமாய் விழுதலால் ஆண்டுக் கூடிய வெப்ப

மும், துருவப் பகுதிகளில் மிகச் சாய்ந்து இருப்பதால் ஆங்குக் குறைந்த வெப்பமும் இருப்பது யாவரும் எளிதில் அறியத்தக்கது. இவற்றையெல்லாம் நுணுகியறிந்த "எக்கல்" (Haeckel) என்னும் ஜெர்மெனியப் பெரும் புலவரும் (ஆரியர் மகேந்திர மலையெனப் பெயரிட்ட) குமரி முனைக்குத் தெற்கேயுள்ள பகுதியின் (நடுக்கோட்டிற்கு இருமருங்குமிருந்த) நிலப்பரப்பே முதல் முதல் மக்கள் வாழ்க்கைக்குப் பொருத்தமான நிலைமைக்காயிற்றென்றும் அங்குதான் மக்கள் முதல் முதல் தோன்றி வாழ்ந்தனரென்றும், அவர்களே நாகரிகத்திற்கு முதன்முதல் வித்திட்டனரென்றும் கூறியுள்ளார். "ஸ்காட் எலியட்" (Scott Elliot) என்பவர் தமது மூழ்கியலெமூரியா (Lost Lemoria) என்னும் நூலில் பாறைகளின் தொன்மை மிக்க தன்மையை மிகவிரிவாய் ஆராய்ந்து தென் இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள கற்பாறைகளே மிகவும்பழமையானதென்றும் இந்தியாவின் மேற்குக்கரையிலிருந்து ஒரு பெரும் மலைத்தொடர் தென்பக்கமாக நீண்டு கிழக்கும் மேற்குமாகச் சென்றிருந்ததென்றும் கூறியுள்ளார். (தமிழ் நாட்டிலுள்ள நிலைகளின் பழமையை நோக்க, வடநாட்டிலுள்ள இமயமலை காலத்தால் மிகப் பிந்தியதென்னும் அறிஞர் கூற்றும் ஈண்டு நோக்கத்தக்கது) புலத்துறை போய "ஹக்ஸ்லி" (Huxley) என்பாரும் இம்மலைத் தொடர்பை லெமூரியாக் கண்டத்திற்குப் பெரும் முக்கியமானதாய்க் கருதுவது கவனிக்கத் தக்கது. ஸ்காட்எலியட் என்பவர் எழுதிய நூலில் காணும் படத்தில் லெமூரியா இருந்த காலத்து எகிப்து (Egypt) நாடு நீரிலிருந்து வெளித்தோன்றவேயில்லை. ஆகவே தமிழகமே எகிப்து நாட்டிலும் பழமையானதென்பது கொள்ளக் கிடக்கின்றது. இங்ஙனமாக ஞாலத்தின் தன்மையை ஆராயுங்கால் மக்கள் வாழ்தற்குப் பொருத்தமான நிலப்பரப்பு ஞாலத்தின் நடுக்கோட்டைச் சேர்ந்த பகுதியென்பது புலப்படுகின்றது.

## கடற் பெருவெள்ளம்

இதுவரை இஞ்ஞாலத்தில் ஏற்பட்ட பெருவெள்ளங்களின் காலங்களை ஸ்காட் எலியட் என்பவர் குறித்துள்ள

வாறு கவனிப்பின் பதினாறாயிரம் ஆண்டுகளுக்கு முன் இரு பெருவெள்ளம் நேர்ந்திருக்கக் கூடுமென்றும், மூன்றாவது வெள்ளம் இருநூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும், நான்காவது பெருவெள்ளம் எண்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும், ஐந்தாவது பெருவெள்ளம் ஒன்பதினாயிரத்து ஐஞ்ஞூறு ஆண்டுகளுக்குச் சிறிது முன் பின்னாகவிருக்கலாமென்றும் அறியக்கிடக்கின்றன. இப்பெருவெள்ளங்களின் காரணமாகப் பல நிலப்பரப்புகள் நீர்ப்பரப்புகளாயும், நீர்ப்பரப்புகள் நிலப்பரப்புகளாயும் மாறிவிட்டன என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உண்டு. குமரிமுனைக்கும் தெற்கிலிருந்த பல நாடுகள் நீரினுள் மறைந்தனவென்றும், வடக்கேயுள்ள பல நாடுகள் நீரினின்று தோன்றியதென்றும் அறியக்கிடக்கின்றன. அக்காலத்தில் தென்னாட்டவர்கள் பல நாடுகளுக்குச் சென்றிருத்தலுங் கூடும். மேற்காட்டிய அவ்வைந்தாவது கடற்பெருக்குக்குப் பின் பெரிதாகக் கருதப்படும் கடல்வெள்ளம் கி.மு. மூவாயிரத்து ஐஞ்ஞூற்றிற்கும் இரண்டாயிரத்து நூற்றைந்துக்கும் இடையே நடந்ததாகப் பெரும் புலவர்கள் கருதுகின்றனர். டெனன்ட் (Tennant) என்பவர் எழுதிய இலங்கைச் சரித்திர (History of Ceylon) த்தில் குறிப்பிட்டுள்ள கடற்பெருக்கும் இதுவே போலும்.

கடைச்சங்கம் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகள் நிலைபெற்றிருந்ததாகத் தெரிகிறது, அஃது கி. பி. மூன்றாவது நூற்றாண்டில் முடிவுற்றதென்பது எவராலும் ஒத்ததொன்றாகும். ஆகவே கி. மு. பன்னிரண்டாவது அல்லது பதினைந்தாவது நூற்றாண்டிலேயே கடைச்சங்கம் தொடங்கியிருக்க வேண்டுமென்பர். இப்போது வழங்கப்படும் சங்கநூல்களில் பல கடைச்சங்க காலத்தில் இயற்றப் பட்டவையாகும். அச்சங்க காலத்தின் இடையில் பன்னிரண்டாண்டு பஞ்சமுண்டாக, பாண்டியன் தன் சங்கப்புலவர்களை அழைத்துத்தமது நாட்டின் நிலைமையைக்கூறி "எம்மால் உங்களை இப்போது ஆதரிக்க முடியாததற்குப் பெரிதும் வருந்துகின்றேன். நீவிர் அனைவரும் விரும்பிய பக்கங்கள் சென்று வாழ்ந்து எமதுநாடு பழையபடி செழிப்பானகாலத்து என்னை நினைத்து

1723

என்னிடம் வாருங்கள்'' என்று விடை கொடுத்தனுப்பினன். பன்னிரண்டாண்டு கழிந்து மழைபெய்ய நாடு செழித்தது. பாண்டியனுக்கு முற்கூறியது நினைவுவர தம் ஒற்றரை அனுப்பிப் பழையபடி புலவர்களை வரவழைத்துச் சங்கத்தை நிறுவினன். அச்சங்கத்தை நடாத்தியவர் முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதிவரை நாற்பத்தொன்பதின்மர் என்பர். மேற்குறித்த வற்கடத்தின்பின் தொல்காப்பியப் பொருளதிகாரம் கிடையாது போகவே "அரசனும் புடை படக்கவன்று, என்னை? எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனில் இவைபெற்றும் பெற்றிலேம்! எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயின் அழனிறக்கடவுள் சிந்திப்பான். என்ன பாவம்? அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அது தானும் ஞானத்திடைய தாகலான் யாம் அதனைத் தீர்க்கற்பாலம்'' என்று அறுபது சூத்திரமாகச் செய்து மூன்று செப்பிதழகத் தெழுதிப் பீடத்தின் கிழிட்டான். அப்பீடத்தின் கீழ்க் கண்டெடுக்கப்பட்டதே இறையனாகப் பொருளென்பது. மேற்காட்டிய இருப்பானது கி. மு. நான்காவது நூற்றுண்டிலே நிகழ்ந்ததாக வரலாற்று நூலாசிரியர் கருதுவதால் அந்நூற்றுண்டின் இறுதியிலேயே இந்நூல் வெளியிடப் பட்டிருத்தல் கூடுமென்பர். இதற்கு நெடுங்காலத்திற்குப் பின்னேயே இந்நூற்கு உரைகாணத் தொடங்கினர் என்பதும் அறிஞர் கருத்தாகும். (சென்னை Oriental Research Journal Vol. 4 Part II) இல் ஸ்ரீமான் டீ. ஜீ. ஆராவமுதனர் செய்த தமிழ்ச்சங்க காலத்தைப் பற்றிய ஆராய்ச்சியிலும் இவற்றை விரிவாய்க் கூறியுள்ளார்.

V211 A N34

மக்கள் நெடிதுகாலம் கைக்குறியாலும் கட்குறியாலும், பொருட்குறியாலும் காலங்கழித்துளார். குறிஞ்சி முதலிய வற்றிலுள்ள அவ்வந்நிலத்துப் பறவைகளும் வண்டினங்களும் விடியற்காலத்து இனிது பாடுவதியற்கை யாதலாலும் கீதத்தில் எல்லாவுயிர்களுக்கும் இயல்பாகவே விருப்பமுண்டாகின்ற படியாலும் அம் மக்கள் தாமும் அங்ஙனமே மெல்லமெல்லப் பாடிப்பாடி நாவினது ஆற்றல் மிக மிக ஒவ்வோர் ஒலிவடிவுண்டாயின தென்பர். இவ்வொலிவடிவுகள் மார்பு உதடு கழுத்து முதலிய இடத்தாலும் நாக்கு முதலிய வற்றின் முயற்சியாலும் வேறுபடுகின்றமையின் அகத்தியத்தின் வழிநூலாகிய தொல்காப்பியத்துள்ளும் " அ, ஆ யிரண்டும் அங்காந்தியலும்" என அங்காந்து கூறும் முயற்சியாற் பிறந்த முதலெழுத்தை இயற்கையாகவே வகுத்துள்ளார். முதல் அங்காந்து பழகியே பின் இதழ் குவித்த ஒலி உண்டாவதைக் குறித்து; "உ, ஊ, ஒ, ஓ, ஔ என இசைக்கும் அப்பாலைந்தும் இதழ் குவிந்து இயலும்" என்றும் "ககார ஙகாரம் முதல் நா அண்மை" என்றும் "சகாரம் ஞகாரம் இடை நா அண்மை" என்றும் டகார ணகார நுனிநா அண்மை" என்றும் மிகத்தெளிவாய்க் கூறப்பட்டிருத்தல் காண்க.

தமிழ் என்றால் இனிமை என்பது பொருள். இனிமை மொழிக்காயிற்று. " தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் சிந்தாமணிச் செய்யுளுக்கு நச்சினார்க்கினியர் 'இனிமை தழுவிய சாயலவர்' என்றலின் தமிழ் என்னுஞ் சொல்லுக்கு இனிமை என்னும் பொருளுண்மை பெற்றும். இனிமை

யாவது யாழிசைக்கொப்ப இயற்கையோசை யுடைமை. அஃது நாவிற் கெளிதாய இயற்கையொலி வடிவெழுத்தும், கைக் கெளிதாய இயற்கை வரிவடிவெழுத்தும், இயற்கைச் சொற்களும், இயற்கைப் புணர்ச்சியும் அன்றி வேறு செயற் கையில்லாத ஒன்றும். கவி சுப்பிரமண்ய பாரதியாரும் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்குங் காணோம்" என்றதும், போப்பையர் தமிழின் சுவைகண்டதும், தமது பிரேத அடக்கத்தில் தமக்குத் தமிழ் மாணவன் எனப் பொறிக்குமாறு கூறியதும் இதனாலன்றோ!

## தமிழ் எழுத்துக்களின் மந்திரப்பொருள்

தமிழ் மொழியின் மந்திரப் பொருளை எடுத்துக்காட்டு வதற்கு இப்போது கிடைக்கக்கூடிய நூல் தொல்காப்பியம் ஒன்றே யாகும். இதன் பொருளைத் தொல் காப்பு இயம் என்று கொள்வாரும் உளர். அதாவது பழமையாகிய மொழிப் பாதுகாப்பு நூலென்று பொருள் கூறுவர். உரையாசிரியர் கள் யாவரும் தொல்காப்பியரை பழைய காப்பியக் குடியில் வந்தோர் என்றனர். குறுக்கையர்குடி, சேக்கிழார் மரபு என் பது போலக் காப்பியக்குடியும் ஒரு மரபாக இருந்ததென்பர். தொல்காப்பியத்தை திருவாளர் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் நுணுகி ஆராய்ந்து இயற்கையில் மூலவடிவமாயுள்ள கருவின் உருவமே தமிழில் ஓங்காரம்; அதாவது மூலப் பிராணவம் என்றும், இவ்வடிவினின்றே தமிழின் மற்றைய வரிவடிவங்கள் உண்டாயதென்றும் தமது "தமிழ் மறைவி ளக்கம்" என்ற நூலில் இனிது விளக்கி யிருப்பதோடு தமிழ ரின் தத்துவ ஞானத்தை (Philosophy of the Tamils) யும் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியத்துள் கூறியுள்ள எழுத்து சொல், வாக்கியம் ஆகிய இவற்றின் சூத்திரங்களைத் தத்து வார்த்தமாய் கவனிக்கின் அவற்றில் அமைக்கப்பட்டுக் கிடக் கும் மந்திரப் பொருள் இனிது விளங்கும் என்க. அவர் காட் டியவையுள் சிலவற்றை இங்குத் தருகின்றனம்.

உயிரெழுத்துக்கள் ஜீவன்; மெய்யெழுத்துக்கள் உடல் என்பர். "மெய்யியக்கம் அகரமோடு சிவணும்". என்ற விடத்து உயிராகிய அகரம் அல்லது ஜீவன் இல்லாது மெய் யாகியஜடம் அல்லது உடலம் இயங்காதென்பர். 'அகரமுதல' என்னுங் குறளான் அகரமாகிய முதலையுடைய எழுத்துக்கள் போன்று (இங்கு ஏனைய பதினோருயிரெழுத்தும் அகரத்துள் அடங்கலான்) இறைவனாகிய முதலை உடைத்து உலகம் என வள்ளுவனார் கூறியவாற்றானும் காண்க. உதாரணமாக க் என்னும் மெய்யெழுத்து குயிலின் (Cuckoo) உடம்பாக நிற்க ஊ என்னும் உயிர் அதனுட்புகின் அஃது உயிர்பெற் றுக் கூவெனக் கூவுகிறது. காக்கையும் அங்ஙனமே க் என் னும் மெய்யெழுத்தாகிய உடலில் ஆ என்னும் உயிர்பெற் றுக் கா எனக் கரைகிறது. இனி, வினையைக் கர்மா எனவும், எதிர்கால வினையை ஆகாமிய கர்மாவுக்கும், நிகழ்கால வினை யை பிராரத்துவ கர்மாவுக்கும், இறந்தகால வினையை சஞ்சித கர்மாவுக்கும், வேற்றுமையைப் புனர் ஜென்மத் (Transmi- ration) திற்குமாகக் காட்டி யுள்ளார். இங்ஙனமாக இயற் கையிலமைந்த தமிழ் மொழியின் பெருமையை இன்னும் சிறிது ஆராய்வாம்

## எழுத்து வகை.

இடையினமும் மெல்லினமும் வல்லினமும் முறையே மாயை காமியம் ஆணவம் என்பனவாய்க் குறித்து நின்று பொருள் பட்டதைப் பின்வரும் செய்யுட்களில் காண்பாம்.

எழுவா யெவர்க்கு முதலாகியீறு டிடையாகி யெங்குமுளையாய்
வழுவா தவர்க்கும் வரமீயவல்லை யவரால் வரங்கள் பெறுவாய்
தொழுவா யுணர்ச்சி தொடராத தன்மை யுருவாய் மறைந்து
(துயரால்
அழுவா யொருத்தனுளை போலுமாரிவ் வதிரேகமாயையறிவார்

இது நாகபாசப் படலத்தில் கருடன் இராமனைத்தேற்றி இரக்கமாய்ப் போற்றியவிடம். இதில் ஆணவம் அல்லது வல்லின எழுத்துக்கள் நூற்றுக்கு 29 வீதம் குறைந்தும், காமியம் அல்லது மெல்லின எழுத்துக்கள் நூற்றுக்கு 13

விதம் இன்னும் மிகக்குறைந்தும், இடையினம் நூற்றுக்கு 59 விதம் கதித்தும் நிற்பது வியப்போடு நோக்கற்பாலது. ய, ர, வ, ஆகிய இடையின எழுத்துக்கள் விமோசன மந்திரங்களில் பெரும்பாலும் கலந்துநிற்பன. சிதம்பரத்தில் இச்செய்யுளோடுகூடிய 24 பாடல்களையும் கம்பர் பாடியவிடத்து அரவந்தீண்டி யிறந்த குழந்தை திரும்ப உயிர் பெற்றதும் கருதற்பாலாது.

"வஞ்சனே னெனக்கு நானே மாதரார் வடிவுகொண்ட
நஞ்சுதோ யமுதமுண்பா னச்சினே னாளுந்தேய்த
நெஞ்சுநோரான தும்மை நினைப்புவிட்டாவி நீக்க
அஞ்சினே னடியனே னும் மடைக்கல மமுதின்வந்தீர்".

இது மாயாஜனகப் படலத்தில் இராவணன் சீதையைத் தன் கருத்துக் கிசையும்படி பாடியவிடம். இங்கு மெல்லினம் அல்லது காமிய எழுத்துக்கள் நூற்றுக்கு 47 விதமும் வல்லினம் அல்லது ஆணவ எழுத்துக்கள் நூற்றுக்கு 36 விதமும் இடையினம் இன்னும் குறைந்து நூற்றுக்கு 17 விதமும் ஆனது காண்க.

"இடித்துரப்பி வந்துபோ ரெதிர்த்தியே லடர்ப்பனென்
றடித்தலங்கள் கொட்டிவாய் மடித்தடுத் தலங்குதோள்
புடைத்து நின்றுஉளத்த பூசல் புக்கதென்ப மிக்கிடம்
துடிப்பவங் குறங்குவாலி திண்செவித் தொளைக்கணே".

இது வாலிவதைப் படலத்தில் சுக்ரீவன் வாலியைப் பார்த்துக் கோபத்தோடு கூறியது. இங்கு ஆணவம் வல்லின எழுத்துக்கள் 64 விதமும் மற்றிரண்டும் சேர்ந்துதானும் 36 மாத்திரமேயாயின காண்க.

தொல்காப்பியத்திற்கு முதனூல் அகத்தியம் என்பது பன்னிரு படலப் பாயிரமாகக் கூறப்படும் செய்யுளொன்றில்

"ஆனுப் பெருமை அகத்திய னென்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
பொருந்தக்கற் றுப் புரைதப உணர்ந்தோன்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்"

என்பதால் அறியக் கிடக்கின்றது.

தற்போதுள்ள நூற்களைக் கொண்டு மாத்திரம் நம் தமிழகம் சிறப்புற்றிருந்த காலத்தை முற்றிலும் அறிவதற்கில்லை யென்பது ஆராய்ச்சியில் வல்ல அறிஞர் கருத்தாகும். ஆகவே தமிழ் நாட்டுக்கு உண்டான கடற்பெரு வெள்ளம், வற்கடம் முதலிய இடர்கள் இல்லாது அந்நாள் தொட்டு இந்நாள் வரை விருத்தியடைந்திருக்குமானால் யாம் தொடக்கத்தில் கூறியாராது ஐயப்பாடுகள் தோன்றற்கு இடமே யிருந்திராது. எவ்வாறாயினும் யாம் இதுவரை எடுத்துக்காட்டிய இச் சொற்ப ஆதாரங்களைக் கொண்டும் நம் தமிழ் மக்களின் நாகரீகத்தையும் அவர்களது மிகப் பழைமையான மொழியின் பெருமையையும் ஒருவாறு அறியக்கிடக்கின்றது. இஃது எமக்கெட்டாத கடமையாயினும் நம் பண்டை மக்களின் மீதுள்ள ஆசை மிகுதியால் கூறினம். பிழை யிருப்பின் அறிஞர் பொறுக்க.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்
மொழியில் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ்
மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்."

**உலகமெங்கும் தமிழ் பரவி யோங்குக.**

---

D2211